உ

சிவமயம்



யாழ்ப்பாணம்

நீர்வேலி

# அத்தியார் – பாலசுப்பிரமணியம்

( பாலாமாஸ்ரர் )

( இளைப்பாறிய யா/ அத்தியார்
இந்துக் கல்லூரி ஆசிரியர் )

04-01-1999இல்

இறைபதம் எய்தியமை

குறித்து

07-02-1999இல்

வெளியிடப்பெறும்

# பாலா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என் கண்ணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

## திருவாசகம்

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனை மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்க.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதுஅருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டெனும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

இறவாத வின்பவன்பு வேண்டிப்
பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன்
னடியின் கீழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனே
இபமாமு கன்றனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை ரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான பாலா உபாத்தியாயர்

நீர்வேலி கிராம மக்களிற்கு கல்வி விருத்திக்கு வித்திட்ட மகான் அத்தியார் அருணாசலத்தின் ஏக புத்திரனாக வந்து பிறந்தார். அவர் அத்தியார் பாடசாலையில் உபாத்தியாராக இருந்து ஓய்வு பெற்றவர். பிள்ளைகளிடமும் உபாத்திமாரிடமும், ஊர்மக்கள் சுற்றத்தாரிடமும் மிக அன்பாக இருந்தவர். பாலா மாஸ்ரர் என்று எல்லோரும் அன்பாக அழைப்பார்கள். கடவுள் பக்தி பண்புமிக்கவர். அவர் எங்கள் குடும்பத்தாரிடமும் அன்பு பூண்டவர் அவருடைய ஆன்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வம் அரசகேசரிப் பிள்ளையாருடைய பாதங்களை வணங்குகின்றேன். அவர்கள் குடும்பத்தாருக்கும் எனது அநுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

'ஆன்மா சாந்தியடைக'

நீர்வேலி. **கா. சாம்பசதாசிவக் குருக்கள்**
(அரசகேசரிப் பிள்ளையார் கோயில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வையூரின் பெருமைக்கு உயர்தொண்டாற்றிய
அத்தியார் அருணாசலம்
மகன்

## பாலசுப்பிரமணியம்
அவர்கள்

அமரர் பாலசுப்பிரமணியம் (பாலா மாஸ்ரர்) அவர்கள் மறைந்தாலும் அவர் சந்ததியினரின் கல்விப்பணியின் அளப்பரும்சேவையை ஊர்மக்கள் இலகுவில் மறந்துவிட முடியாது. அத்தியார் இந்துக்கல்லூரியாகிய கல்விக்கூடத்திற் பணி நின்று விளங்கும் வரை அமரர் பாலசுப்பிரமணியம் குடும்பத்தினரின் பெயரும் நீர்வை மக்களின் நெஞ்சம் விட்டகலாது. ஊருக்குப் பெருமைதேடித் தந்த ஊரார்பெருமையுடன் போற்றிய நல்லதொருகல்விப் பரம்பரையில் உதித்த அமரர் அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. பல ஆண்டுகளாகப் பழகிய தெரிந்த அமைதியும், நற்பண்புகளும் கொண்ட அமரர் பாலா மாஸ்ரர் அவர்களின் பிரிவாற் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஸர்வே ஜனாகா சுகினோக பவந்து
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்லக்கதிர்காம கோவில்
நீர்வேலி.

பிரம்மஸ்ரீ
கு. தியாகராச சர்மா
(மணி ஐயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலா மாஸ்டர் வாழ்க்கைப் பாதையில்

நீர்வளம், நிலவளம் மிக்க நீர்வேலிக் கிராமத்தின் மத்தியில் உயர்சைவ ஏராளர் குடியில் புகழ்பூத்த முதலியார் அத்தியார் அருணாசலம் சமாதான நீதவான் அவர்களும் அவர்தம் பிரிய பத்தினி தங்கம் அவர்களும் செய்திட்ட இல்லற தர்மத்தின் பயனாக ஏகபுத்திரனாக 11-10-1920இல் பிறந்தவரே இந்நினை விற்குரிய அ. அ. பாலசுப்பிரமணியம் (பாலா மாஸ்டர்) அவர்கள்.

யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி கொழும்பு புனித ஜோசேப் கல்லூரி என்பனவற்றில் கல்வி கற்று உயர்நிலையெய்தி தனது தந்தையார் அமைத்த அத்தியார் இந்துக்கல்லூரியிலேயே தனது 20வது வயதில் ஆசிரியப்பணியை ஆரம்பித்தவர்.

19வது வயதிலேயே தாயை இழந்த இவர் தந்தையாரின் வழிகாட்டலில் வளர்ந்துவரும் வேளையில் திருமணப் பருவம் நிறைந்த இவருக்கு 29வது வயதில் புத்தூரில் புகழுடன் வாழ்ந்த செல்லப்பா தம்பதிகளின் புத்திரி சரஸ்வதி என்பவரைத் திரு மணம் செய்து வைத்தனர்.

இல்லற வாழ்வில் செய்திட்ட நல்லறத்தால் மனோகரன், புஸ்பராணி என்னும் இரு சற்புத்திரர்களைப் பெற்றெடுத்தனர் இல்லறக்கிளத்தியான சரஸ்வதி நோய்வாய்ப்பட்டு 1951இல் இறை பதம் அடைந்துவிட்டார்.

இளம்வயதில் மனைவியை இழந்த பாலா மாஸ்ரருக்கு மறு மணம் செய்துவைக்க விரும்பிய தந்தை தன்னைப்போல இள வாலையில் கல்விப்பணி புரிந்தவரும் இளவாலை சுப்பிரமணிய வித்தியாலய ஸ்தாபகருமான பொன்னம்பலம் தம்பதியரின் புதல்வி கற்புடைச்செல்வி சிவபாக்கியம் என்னும் ஆசிரியை அவர்களை மறுமணம் செய்து வைத்தனர்.

1954ஆம் ஆண்டு மறுமணம் செய்துகொண்ட தம்பதிகளின் இல்லறவாழ்வின் பயனாக சிவசங்கரன், அருணாசல முதலியார் காசிநாதமுதலியார், தங்கராணி, இராஜராஜேஸ்வரி என்னும் ஐந்து சற்புத்திரர்கள் பிறந்தனர். பிள்ளைகள் அனைவரும் கல்வி யில் வல்லவர்களாக வளர்ந்து நல்லவர்களாகவும், வல்லவர்களா கவும் வாழ்ந்து வருகின்றனர்.

முதல் மனைவி பெற்றமகன் மனோகரன் கொழும்பில் கணக்காளராகக் கடமை புரிகின்றார். மனைவி நகுலேஸ்வரி, பிள்ளைகள்-டிலூக்ஷன், நிரோஷன். அர்ச்சுனன் சகிதம் கொழும் பிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் புஸ்பராணி என்பவர் இலங்கைநாதன் என்பவரை மணந்து ஆரணி, ஆதித்தன் என்னும் பிள்ளைகள் சகிதம் இலண்டனில் வாழ்ந்து வருகின்றனர்.

இரண்டாவது மனைவி சிவபாக்கியம் என்பவர் தங்கள் மாமனாரால் அமைக்கப்பட்ட அத்தியார் இந்துக்கல்லூரியில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்து காலநீரோட்டத்தில் பிரதம பகுதி தலைமையாசிரியராகவும் பணிபுரிந்து தற்போது இளைப்பாறியுள்ளார். பாலா மாஸ்ரரும் தனது 40 வருட சேவையின் பின் இளைப்பாறிவிட்டார்.

இவர்களின் பிள்ளைகளில் முதல்வனான சிவசங்கரன் என்பவர் மனோராணி ( ஆசிரியை ) என்பவரை மணந்து இருபிள்ளைகளைப் பெற்று அவர்கள் இறைநிலையடைந்து துன்பத்தில் வாழ்கின்றனர்.

2ம் மவரான அருணாசலம் முதலியார் கனடாவில் படவரைஞராகத் தொழில் புரிகின்றார். யோகச்செல்வம் என்பவரை மணந்து சங்கீதா, கஜானன் என்பவர்களைப் பெற்று இனிது வாழ்கின்றனர்.

அடுத்த மகனான காசிநாதமுதலியார் இந்தியாவில் தொழில் நுட்பவியலாளராகப் பணிபுரிகின்றார்.

அடுத்தவரான மகள் தங்கராணி என்பவர் பட்டதாரி ஆசிரியையாக மன்னாரில் கடமையாற்றும் போது காலன் கையில் சிக்குண்டு இறைபதம் அடைந்து விட்டார்.

இளைய மகளான இராஜராஜேஸ்வரி என்பவர் ஆவரங்கால் மகாஜனா வித்தியாசாலையில் ஆசிரியையாகவும், செல்வியாகவும் வாழ்ந்து வருகின்றார்.

இப்படியான நிறைவாழ்வு கண்ட பாலா மாஸ்ரர் தனது இறுதிக்காலம் கிட்டிவிட்டதை உணர்ந்து கொழும்பு சென்று பிள்ளைகளை அணைத்தும் இந்தியா சென்று பிள்ளைகளை வாழ்த்தி விட்டு இளைய மகளின் வாழ்வில் அக்கறை கொண்டிருக்கும் காலத்தில் தனது முதலாவது பேரப்பிள்ளையின் பூப்பு நீராட்டுவிழா லண்டனில் நடைபெற்ற செய்தி அறிந்து மட்டில்லா மகிழ்வுடன் வாழ்ந்த காலம்

அவரை திடீரெனப் பிடித்த நோயினால் தனது 79வது வயதில் 1999ஆம் ஆண்டு ஜனவரி 4ஆந் திகதி வெகுதானிய வருடம் மார்கழி மாதம் 20ஆந் திகதி திங்கட்கிழமை அபரபக்க துதியைத் திதியில் இவ்வுலக வாழ்வை இனிது துறந்து விட்டார்.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமையுடைத் திவ்வுலகு''

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத பெருமகன்

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கு பொருத்தமாக வாழ்ந்ததுடன் தன் வாழ்க்கைப் பாதையை மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைத்து வாழ்ந்த பெருமனிதர் அமரர் பாலசுப்பிரமணியம் என்றால் அது மிகையில்லை. எளிமையான தன்மை, அமைதியான போக்கு, பிறரை அன்புடன் நேசிக்கும் மனப்பாங்கு, முற்போக்கான சிந்தனைகள் என்பன அவரிடம் காணப்பட்ட சிறந்த பண்புகளாகும். யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும், கொழும்பு சென். தோமஸ் கல்லூரியிலும் கல்வி கற்று ஆங்கிலத்திலே மிகவும் புலமை பெற்ற இவர் அன்று இருந்த வசதிக்கு கொழும்பிலேயே உயர் பதவி பெற்று பணிபுரிந்திருக்கலாம். ஆனால் அவற்றை எல்லாம் விடுத்து தந்தையாரின் பொதுப்பணியை தான் தொடர வேண்டும் என்ற நற் சிந்தையுடன் தந்தையாரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையிலேயே ஆசிரியராக பணியாற்றமுன்வந்தார். ஆங்கிலத்துடன் சரித்திரம், புவியியல் போன்ற பாடங்களையும் கற்பித்து திறம்பட தனது பணியைச் செய்து வந்தார்.

என்னுடன் அவர் பேசும் போதெல்லாம் பாடசாலை முன்னேற்றம் தொடர்பான கருத்துக்களையே பேசுவார். முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களது பணியை மிகவும் அக்கறையுடன் தந்தையாருக்கு செய்யும் பெரும் கடனாக செய்து வந்த இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். இறப்பு என்பது இயற்கையின் நியதி என்று நாம் மனதைத் தேற்றி அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அவரது நோக்கம் கொள்கைகள் நிறைவேற தொடர்ந்து செயற்படுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா / அத்தியார் இந்துக்கல்லூரி
நீர்வேலி.

**சோ. விஸ்வலிங்கம்**
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பண்பாளன்

அமரத்துவம் அடைந்த உயர்திரு. அத்தியார் அருணாசலம் பாலசுப்பிரமணியம் அவர்களை ஏறத்தாழ ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நன்கு அறிவேன். முதலில் 1945ஆம் ஆண்டு யா/அத்தியார் இந்துக் கல்லூரியில் மாணவனாக நான் சேர்ந்த போது எனது முதல் ஆங்கில ஆசிரியராக வகுப்பறையில் சந்தித்தமை இன்றும் எனது ஞாபகத்தில் உள்ளது. அக்கால கட்டத்தில் இரண்டாம் உலக யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இக் கல்லூரியின் ஆங்கிலப் பிரிவில் கற்பித்த ஆசிரியர்கள் அனேகர் ஆங்கிலேயருக்குரிய முழுமையான சீருடை அணிந்தே கல்லூரிக்கு வருவார்கள். இவர்களுள் அமரரும் அடங்குவர். அப்போதைய இளமைத்தோற்றம் இன்றும் எனது மனதை விட்டு நீங்கவில்லை. தோற்றத்தில் சிறியவராகஇருந்தபோதிலும் எப்போதும்புன்னகை பூர்த்த முகமும், மாணவர்களைக் கவரக்கூடிய இனிய சுபாவமும் நற்பண்பாளனாகவும், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தும், ஆசிரியர், மாணவர், பெற்றோர் மத்தியில் பிரபல்யமுடையவராகவும் விளங்கினார்கள். இவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆங்கில பாடப் போதனை என்னை கல்விச்சமூகத்தில் உயர்த்தி வைப்பதற்கு ஏணியின் முதற்படியாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. இவ்வகையில் எனது நல்லாசான்களில் ஒருவராக ஏற்றிப்போற்றி சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

அமரரின் தந்தையாரான மதிப்புக்குரிய உயர்திரு அத்தியார் அருணாசலம் அவர்களால் தாபிக்கப்பட்ட கல்லூரியிலேயே ஏறத்தாழ 40 வருடங்கள் வரை நல்லாசானாக விளங்கியதோடு தந்தையாரின் பின்னர் கல்லூரியின் முகாமையாளராகவும் சிறிது காலம் விளங்கினார்கள். இவர்களின் முகாமைத்துவத்திற்கு உட்பட்ட காலத்தில் கல்லூரி சீரும் சிறப்பும் பெற்று விளங்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தனது கல்விச்சேவை யோடு நின்றுவிடாது சமூகப்பணிகளிலும் ஈடுபாடு உடையவரா கவும் விளங்கினார். அன்னார் ஆன்மீகத் துறைகளிலும் நாட்ட முடையவராகவும் விளங்கினார்.

அமரரின் இழப்பு தவிர்க்கமுடியாததொன்று ஆனாலும் இது அமரரின் குடும்பத்தினருக்கும், கல்விச் சமூகத்திற்கும், நீர்வேலி வாழ் மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் சுவடுகளைப் பின்பற்றி இவரது குடும்பத்தினர் அக்கைங்கரியங்களை நிறை வேற்றி உதவுவதே அன்னாரின் ஆன்மா சாந்தியடைய உதவு வதாகும்.

அமரரின் நினைவு மலரில் இதனை இடம்பெறச் செய்ய வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றி அறிதலைத் தெரிவிப்ப தோடு ஆறாத்துயரடைந்துள்ள அமரரின் குடும்ப அங்கத்தின ருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் சபிண்டீகரண வைபவத் தின் போது இவர்களுடன் ஏனையோரும் கலந்துகொண்டு அன் னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போ மாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிறுப்பிட்டி. வே. சந்திரசேகரம்பிள்ளை
15-01-1999 (ஓய்வுபெற்ற அதிபர்)

# அமரர் பாலசுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள்

நீர்வைக்கிராமத்தில் வாழ்ந்து மறைந்த மக்களுள் சிலர் நற்குணமும் பண்பும்மிக்க மாண்புடை மாமனிதர்களாக விளங்கினர் அவர்களுள் எம்மைவிட்டுப்பிரிந்த உயர்திரு. **அத்தியார் - பாலசுப்பிரமணியம்** ஆசிரியரும் ஒருவர் ஆவர்.

முதலியார் அத்தியார் - தங்கம்மா தம்பதிகளின் அருந்தவ மகன். ஏகபுத்திரன் இவர் அத்தியார் குடும்பத்தின் **அரசகுமரன்** என எல்லோரும் போற்றச் சிறப்புடன் வாழ்ந்தார்

இவ்வுலகில் வாழவேண்டிய முறைகளோடு வாழ்ந்து 78ஆம் வயதில் மறைந்தார். வானுறையும், தெய்வத்துள் சங்கமம் ஆனார். இவர் தந்தையார் முதலியார் அத்தியார் அருணசலம் அமைத்த கல்வி நிறுவனம் இவர்கள் பரம்பரைக்கு அணிகலனாக அழியாத முத்திரையாக விளங்குகிறது. இவர் கொழும்பு நகரில் சிறப்புமிக்க ஆங்கிலக்கல்லூரி சென்ற் யோசேப்பில் கல்விபயின்று தன் தந்தையார் அமைத்த நிறுவனத்தில் ஒரு ஆங்கில ஆசிரியராகச் சேவை செய்தார்.

இவர் நன்மனையாள்கள் **சரஸ்வதி, சிவபாக்கியம்** என்பவர்களுடன் இல்லறவாழ்வு வாழ்ந்து அறி வறிந்த நன்மக்களைப் பெற்றுத்தன் வாழ்வில் நிறைவு பெற்றார். இவர் என்றும் இன்மொழி பேசுவார். எவரிடமும் அன்புடன் பழகுவார். பிறர்கு எட்டுணையேனும் துன்பம் செய்ய நினையாத நற்குண சீலர் இவர் உள்ளத்தாற் பொய்யா தொழுகி உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உறைந்த உத்தமன்.

**" அன்புற்று அமர்ந்த வழ்க்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு "**

என்ற பொய்யா மொழிக்கு இலக்கியமாக விளங்கினார்.

இப்பெரியார் மறைந்தாலும் இவரையும் இவரின் பிதா அத்தியார் வள்ளலையும் எம் கிராமத்தவர், அறிஞர்கள், மாணவர்கள், சமூக சேவையாளர்கள், சான்றோர்கள் அனைவரது உள்ளங்களிலும் நிங்காத நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.

" வாழ்க பாலசுப்பிரமணியம் நாமம் "

நீர்வேலி,

**த. வேலுப்பிள்ளை**
( முன்னாள் அதிபர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலா மாஸ்ரர்

பிறப்பும் இறப்பும் இயற்கையே. ஆயினும் நாம் நன்கறிந்த உத்தமர்களின் பிரிவினை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை; ஏதோ நாமும் எம் சமூகமும் பெரிதும் பெலவீனமடைகின்றதென ஒரு உணர்வு! தவிர்க்கவும் முடியாது! அவ்வரிசையில் அண்மையில் மின்னல் பொழுதில் மண்ணில் மறைந்து வரலாறு படைத்துள்ளார் **அமரர், ஆசிரியர் ஸ்ரீமான் அத்தியார் அருணாசலம் பால சுப்பிரமணியம்.**

"**பாலா மாஸ்ரர்**" என்று சிறிசுகளாலும் முதியவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டவரின் தந்தையாரே **அமரர் முதலியார் அத்தியார் அருணாசலம் J. P.** ஆவர். அவர் வாழ்ந்த காலத்தில் யாழ் மாவட்டத்தில் பிரபலமடைந்த ஒரு சிவபெரியார்களுள் அவருமொருவராவர். தனது சொந்தப் பணத்துடன் 1929இல் உருவாக்கப்பட்டதே அ. இ. கல்லூரியாகும், அவர் நிறுவிய கல்லூரியொன்ற அவரின் சிறப்பினைக் கூறப்போதுமானது. அத்தகைய மகானின் ஏகபுதல்வனே "பாலா மாஸ்ரர்"

யாழ் சம்பததிரிசியார் கல்லூரி, கொழும்பு புனித ஜோசேப் கல்லூரிகளில் பயின்று உயர் நிலைப்படிப்பினைப் பூர்த்திசெய்து, தம் தந்தையாரின் கல்லூரியிலேயே ஆசிரியப் பணியை மேற்கொண்டு தம் 60வது வயதில் ஓய்வுபெற்ற சிறப்புக்குரியவர்.

தந்தையார் நினைத்திருந்தால் தன் ஏகபுதல்வனை அன்று சீமைக்கனுப்பி பாலா மாஸ்ரரை ஒரு சீமானாக்கியிருக்கலாம்! ஒரேயொரு பிள்ளையை விட்டுப்பிரிய மனமில்லைப் போலும்! மாறாக, தந்தையார் தம் தனத்தையெல்லாம் தம் சமூகப்பிள்ளைகளைச் சீராக்கி, சீமான்களாக்கவே விரும்பினார்.

தந்தையார் தனக்குப்பின் தன் மகனே பாடசாலை முகாமையாளராக வருவார் என்ற நோக்கில் அவருக்குச் சிறந்த வழிகாட்டியாய் விளங்கினார், 1960இல் அரசு பாடசாலைகளைச் சுவீகரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதிருப்பின் அமரர் பாலசுப்பிரமணியமே கல்லூரியின் முகாமையாளராக மாறித் தம் தந்தையார் போல் வரலாறு படைத்திருப்பார்.

ஏதோ தன் தந்தையின் பள்ளியில் ஆசானாயமைந்து, நிறைவான மனத்துடன், ஏற்றத்திலும் இறக்கத்திலும் தளராது, தம் பணியாற்றி, தம் மாணவர் இதயத்தில் பற்றுடன் அமர்ந்து பணியாற்றிய பேறு பெற்றவர். ''பாலா மாஸ்ரர்'' என்றால் பள்ளிச்சிறார்களுக்குப் பாலாய், பழமாய், இனிக்கும். பாலா மாஸ்ரரும் பாலர்க்குரிய புன்னகையுடன் குழந்தை உள்ளம் கொண்ட உத்தமன்! சற்குணன்!

அமரரின் விண்ணக வாழ்வு பொழிவுறப் பிரார்த்திப்பதுடன் அமரரின் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகட்கும் எம் ஆறுதலைக் கூறி, அவர்கட்கும் இறையருள் பாலிக்கப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!

த ந. பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழகுவதற்கு இனியவர் பாலா மாஸ்ரர்

பிறப்பும், இறப்பும் இயற்கையே. இதைமாற்றிய மைக்க யாராலும் முடியாது. இடைப்பட்ட காலமாகிய வாழ்க்கைக்காலமே சுகதுக்கங்களை அனுபவித்து வாழும் காலமாகும். இக்காலத்தில் நிறைவாழ்வுவாழும் பேறு கிடைப்பது பெருமைக்குரியதே.

நீர்வேலிக் கிராமத்தின் மத்தியிலே சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி செய்து புகழ்பூத்த குடும்பமாகிய அத்தியார் குடும்பத்தில் ஏகபுத்திரனாகப் பிறக்கும் பேறு பெற்றதே பெருமைக் குரியதாகும்.

மேலும், அப்புகழ்பூத்த குடும்பத்தின் புகழை மங்க விடாது பேணிப்பாது காத்தது உயர்ந்த பண்பாகும்.

" பாலா " என்ற சொல்லுக்கே இலக்கணமாக வாழ்ந்தவர் எங்கள் மாஸ்ரர். குழந்தை உள்ளங் கொண்டவர் கள்ளங்கபடமறியாதவர் அனைவரையும் ஒரே கண்ணால் நோக்குபவர், சினம், என்பது எப்படி என்பதே தெரியாதவர் கண்டிப்பு என்பதே தெரியாதவர்.

தனது தந்தையார் அமைத்த கல்லூரியிலேயே தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்தவர், பல நற்பிரசைகளை உருவாக்கியவர் மாணவர்களை யெல்லாம் அன்பினால் அரவணைத்து தனது ஆளுமையால் கல்விபுகட்டிய நல்லாசான்.

தனது வாழ்க்கைக் காலத்தில் பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக விருந்து தனது தந்தையின் கல்விப்பணியை அவரின் மறைவின் பின் அணையவிடாது பாதுகாத்த கல்விக்காவலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பாலசுப்பிரமணியம் " என்ற பெயர் தீர்க்க தரிசன மாகவே அமைந்து விட்டதோ அல்லது பெயருக்கேற்ப நடந்து கொண்டதால் சிறப்பாக அமைந்ததோ என எண்ணக் கூடியதாக வாழ்ந்தவர். பொருட்செல்வம், மக்கட் செல்வம் எல்லாம் சரிவரப் பெற்று நிறைவாழ்வு வாழ்ந்தவர்.

" பாலா " என்றபதத்திற்கேற்ப வாழ்ந்து ஆசிரிய சமுகம், மாணவசமுகம் உற்றார், உறவினர். ஊரார், அயலவர் என்ற பல்திறப்பட்டவர்களுடனும் இனிமையா கப்பழகி, அனைவரினதும் அன்பிற்குப் பாத்திரமாக விளங்கி தன்து 79வது வயதில் இவ்வுலக வாழ்வை இனிது துறந்து எல்லாம் வல்ல பரம் பொருளின் பாதார விந்தங்களை அடைந்துவிட்டார்

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சுவோமாக.

த. பரராஜசிங்கம்
பழையமாணவன்

மிதிலை,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி,
21 - 1 - 99.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

காலஞ் சென்ற ஆசிரியர் பாலசுப்பிரமணியத்தின் திடீர் இழப்பை அறிந்து மிகவும் ஆழ்ந்த கவலையுற்றேன்.

நெருங்கிப் பழகிய ஒரு உத்தமனை, நல்லாசானை, நற்சிந்தனையாளனை, நன்மதிப்புப் பெற்ற குடும்பத்தின் விழுதினை நமது சமூகம் இழந்து விட்டது. இது மிகவும் வேதனைக்குரியது.

எமது கிராமத்தின் அறிவியல் சிந்தனைகளை, சமய, சமூக அடிப்படையில் கல்வி கற்கும் கல்விக் கூடத்தை தியாக மனப் பான்மையோடு உருவாக்கிய பெருமை இவரது தந்தையார் அத்தியார் அருணாசலம் J. P அவர்களுக்கே உரியது. அந்தப் புகழ்பூத்த தந்தைக்கு ஏக புதல்வனாகப் பிறந்த ஆசிரியர் பாலசுப்பிரமணியத்துக்கும் அந்தப் புகழின் பங்குண்டு. அவரது விதித்தோன்றலாக அமைந்ததால் சுயநல மற்ற சிந்தனைகள் இவரிடம் இயற்கையாகவே அமைந்திருந்தன. கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு இவர்களது குடும்பம் நிறைந்த பங்காற்றியுள்ளதென்றால் மிகையாகாது.

என்றும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பையிட்டு கவலையடைகின்றேன். அவரது ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்து முத்தியின்பம் பெற வேண்டுமென இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

எனது ஆழ்ந்த கவலையை, அனுதாபத்தை குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் தெரிவித்து அமைகின்றேன்.


சி. மகேந்திரன்
(பழைய மாணவன்)
அ. இ. க. நீர்வேலி

28, A சுதர்சனா றோட்,
ஓவ் சில் ஸ்ரீத்,
தெகிவளை.


14 - 01 - 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

காலஞ் சென்ற எமது இல்லத்தலைவரின் திடீர் சுகவீனத்தின் போது உதவிய அன்புள்ளம் கொண்டவர்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும், அவரின் மறைவுச்செய்தி அறிந்து உடன் வந்து உதவிகள் பல புரிந்தும் ஆறுதல் வார்த்தைகள் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், அபிவிருத்திச் சங்கத்தினர், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இறுதிக் கிரிகையின் போது கலந்து கொண்ட அனைவருக்கும் பெருந்தொகையான மாலைகள் மலர் வளையம் சமர்ப்பித்து கண்ணீர் அஞ்சலி செலுத்திய அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் அஞ்சலியுரை நிகழ்த்திய பெரியோர்களுக்கும் அந்தியேட்டி சபிண்டீகரண இல்லக் கிரியைகளின் போது வருகை தந்து சிறப்பித்தோருக்கும், நினைவு மலருக்கு விடயதானம் செய்த ஆலய குருமார்கள், பெரியோர்களுக்கும், மலரை அழகுற அச்சிட்டு உதவிய அச்சகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

இங்ஙனம்

நீர்வேலி மத்தி, **மனைவி, மக்கள்,**
நீர்வேலி. **மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org